பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. பி.எல்.

மலர்: 20| சென்னை: ஆடி 20 (4—8—72) வெள்ளி

வெளியூர்: ஆடி 21 5 8—72) சனி [இதழ்: 44

## சிம்லா ஒப்பந்தம்

### நாடாளுமன்றம் ஏற்றது

புதுடில்லி, ஆக. 4—

இந்தியாவுக்கும் -- பாகிஸ்தானுக்கும் இடையில் சிம்லாவில் ஏற்பட்ட ஒப்பந்தத்துக்கு இந்திய நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துவிட்டது.

ஏற்கனவே மக்களவையில் ஒப்புதல் பெற்ற இந்த ஒப்பந்தம், நேற்று நாடாளுமன்ற மேலவையிலும் ஒப்புதல் பெற்றுவிட்டது.

# கழக ஆட்சியைக் கவிழ்க்கச் சதி

## தலைமையமைச்சரின் ஆதரவுடன் தமிழ்நாட்டு இந்திரா காங்கிரசு முயற்சி

### உ. பி. சட்டமன்றத்தில் முன்னாள் முதல்வர் சரண் சிங் வெளியிட்ட தகவல்

லக்னோ, ஆக. 4--

"1952-ம் ஆண்டிலிருந்தே காங்கிரசு, கட்சி மாறுபவர்களுக்கு ஊக்கம் தந்துவந்திருக்கிறது; கூட்டு மாநிலமாக இருந்த அப்போதைய சென்னை மாநிலத்தில் இது துவக்கிவைக்கப்பட்டது; இப்போதுகூட, தமிழகக் காங்கிரசுக் கட்சி -- தலைமையமைச்சர் ஆதரவுடன் -- அங்குள்ள தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்க்க முயற்சி செய்துவருகிறது"

என்று உ. பி. சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் சரண் சிங் வெளிவுறச் சுட்டிக்காட்டி விளக்கினர்.

உத்தரப் பிரதேச அரசுமீது எதிர்க் கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நேற்று சட்டமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக 115 வாக்குகளும் -- எதிராக 57 வாக்குகளும் கிடைத்தன.

தீர்மானத்தின் மீது பேசிய எதிர்க் கட்சித் தலைவர் சரண் சிங், அமைச்சர்கள் மீது பலகுற்றச்சாட்டுக்களைக் கூறினர்; கட்சி மாறிய உறுப்பினர்களாலேயே காங்கிரசு பெரும்பான்மை பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டார்.

காங்கிரசுக் கட்சியினரும் எதிர்க் குற்றச்சாட்டுக்கள் கூறினர்.

முடிவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டதில் தீர்மானம் தோல்வியடைந்தது.

## புதுடில்லியில்

# சட்டம்--ஒழுங்கு படும்பாடு

### நாடாளுமன்றத்தில்புகார்

புதுடில்லி, ஆக. 4—

'புதுடில்லியில், சட்டம் -- ஒழுங்கு நிலைகுலைந்துச் சீர்கேடு அடைந்திருக்கிறது"

என்று மக்களவையில், பல உறுப்பினர்கள் புகார் கூறினர்.

"நகரக் காவல் துறைக்கு ஆணையர் (கமிஷனர்) நியமிக்கும் முறை பற்றி மத்திய அரசு இதுவரை எவ்வித முடிவுக்கும் வர இயலவில்லை; என்ருலும், அதற்கும் சட்டம் -- ஒழுங்கு நிலைக்கும் தொடர்பு கிடையாது"

என்று, மத்திய உள்துறை இணை அமைச்சர் கே. சி. பந்த் பதிலளித்தார்.

# மைசூரில் இந்திரா கட்சி அரசின் 'அணுகு முறை'

## போலீசு துப்பாக்கிச்சூடு-ஐவருக்குக் காயம் - ஒருவர் நிலை கவலைக்கிடம்

### நீதி விசாரணை நடத்தக் குமாரமங்கலம் குரல் கொடுப்பாரா?

பெங்களூர், ஆக. 4--

தவனகிரி நூற்பு நெசவாலைத் தொழிலாளர் ஐந்து பேர் நேற்று போலீசுத் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி குண்டுக் காயங்கள் அடைந்தனர்.

தொழிலாளி ஒருவர் சஸ்பெண்டு செய்யப்பட்டதால் ஆத்திரமுற்ற தொழிலாளர்கள் ஆலை நிர்வாகியைத் தாக்கினர் என்றும்--பின்னர் அவர் இறந்துவிட்டார் என்றும், அவர்கள் நிர்வாகியின் அலுவலகத்தில் கொள்ளையடித்தனர் என்றும் போலீசார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த தொழிலாளிகளில் ஒருவர் சித்ரதுர்க்கம் மருத்துவமனையில் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

தவனகிரி பெங்களூரிலிருந்து 240 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

## ஆந்திரத்தில் துப்பாக்கிச் சூடு

விஜயவாடா, ஆக. 4—

சரக்கு இரயிலில் ஏற்றப்பட்டிருந்த சர்க்கரை மூட்டைகளைக் கொள்ளையடித்த பத்தும் பேர் கொண்ட கூட்டத்தின் மீது குனதாலா (விஜயவாடாவிலிருந்து 4 கிலோ மீட்டர்) இரயில் நிலையத்தில் இரயில்வே பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இரயில்வே பாதுகாப்புப் படைக் காவலர், கொள்ளையர் முயற்சியைத் தடுத்தபோது -- அவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு தாக்கிக் காயப்படுத்தினர் என்றும் காவலர் தன்னை காத்துக்கொள்ளச் சுட்டார் என்றும், கொள்ளையிட்ட சர்க்கரை மூட்டைகளைப் போட்டுவிட்டு கொள்ளையர் ஓடிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

## சேலம் உருக்காலைக்குச் சொந்தமாக ஒரு பிரிவு

புதுடில்லி, ஆக. 4—

"சேலம் உருக்காலைக்குச் சொந்தமாக ஸ்டெயின்லஸ் ஸ்டீல் (துரு ஏருத உருக்கு) தொழிற்சாலை இருக்கும்; துர்காபூரிலுள்ள ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தொழிற்சாலையை சேலத்துக்கு மாற்றும் எண்ணமில்லை"

என்று மக்களவையில் உருக்குத் துறை அமைச்சர் மோகன் குமாரமங்கலம் தெரிவித்தார்.

# குண்டர்கள் தாக்குதலுக்கு இலக்கான கழகத் தோழர்களின் இல்லங்கள்

## அமைச்சர் மாதவன் நேரில் சென்று பார்த்தார்

### எதிர்க் கட்சியினரின் கூற்று எந்த அளவுக்கு உண்மை என்பதும் புலப்பட்டது

மதுரை, ஆக. 4—

விவசாய சங்கக் கிளர்ச்சியின்போது வன்முறை வெறியர்களின் தாக்குதலுக்கு ஆளான கழகத் தோழர்களின் இல்லங்களையும் -- கடைகளையும் -- தொழிற்கூடங்களையும் முகவை மாவட்டத்தின் பல பகுதிகளுக்குச் சென்று சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள் பார்வையிட்டார்.

இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்ருல், அமைச்சர் மாதவன் கழகத் தோழர்களின் இல்லங்களை மட்டுமல்லாது தாக்குதலுக்குள்ளானதாகக் காங்கிரசுக்காரர்களால் கூறப்பட்ட பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டார்.

இந்திரா காங்கிரசின் தலைமைபீடத்தால் அனுப்பி வைக்கப்பட்ட குழுவும் -- மத்திய அமைச்சர்கள் ஒருவரும கிளர்ச்சியின்போது தாககப்பட்டு நாசமடைந்த கழகத் தோழர்களின் இல்லங்கள் -- கடைகளைப் பாராது ஒரு சார்பு கண்ணோட்டத்துடன் பார்வையிட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அமைச்சர் மாதவன் அவர்கள், தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்பட்ட காங்கிரசுக்காரர்களின் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்ட பிறகு எதிரிகள் கிளப்பிவிட்ட புரளியின் உண்மை வடிவம் நன்கு தெரிந்தது.

இராசபாளையத்திலும், திருவில்லிப்புத்தூரிலும், சாத்தூரிலும் கிளர்ச்சி நடைபெற்ற பகுதிகள் அனைத்திற்கும் சென்று அமைச்சர் பார்வையிட்டார்.

இராசபாளையத்தில் கடும் தாக்குதலுக்குள்ளாகியுள்ள கழக இசைக் குழுவினர் மணி -- சாமி இல்லத்தையும், அவர்களின் சைக்கிள் கடையையும் அமைச்சர் பார்வையிட்டார்; நகரச் செயலாளர் இல்லம் நாசப்படுத்தப்பட்டிருப்பதையும் அவர் பார்த்தார்.

திருவில்லிப்புத்தூரில் சிண்டிகேட் முக்கியஸ்தரான ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் இல்லத்திற்கும் சென்று அவருடன் அமைச்சர் சிறிது நேரம் உரையாடிவிட்டுத் திரும்பினர்.

விவசாயக் கிளர்ச்சியின்போது வன்முறை வெறியர்களின் தாக்குதலுக்குள்ளானதும் -- பாதிக்கப்பட்டதும் கழகத் தோழர்களின் இல்லங்களும், உடைமைகளும்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆளுநரிடம் அபலை மீனுள் முறையீடு

## அநியாயமாகத் தனது கணவர் முத்து வெட்டிக் கொல்லப்பட்டதைக் கூறிக் கதறல்

### கண்கலங்கி ஆறுதல் கூறினர் ஆளுநர்

சிவகங்கை, ஆக. 4—

அண்மையில் வலது கம்யூனிஸ்டு வெறியர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட கழகத் தோழர் முத்துவின் மனைவி, சிவகங்கைக்கு வந்திருந்த ஆளுநர் கே. கே. ஷா அவர்களைச் சந்தித்து – தமது கணவர் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டதைக் கூறிக் கதறி அழுதார்.

இராமநாதபுரம் மாவட்டத்துக்கு வந்திருந்த ஆளுநர் கே. கே. ஷா, சிவகங்கை பயணியர் விடுதியில் தங்கியிருந்தார்.

கொலை செய்யப்பட்ட கழகத் தோழர் முத்துவின் மனைவி திருமதி மீனுள், பயணியர் விடுதி வந்து ஆளுநரைச் சந்தித்துக் கதறியழுதது, காண்போர் உள்ளத்தை உருகச் செய்வதாக இருந்தது.

'ஐயா -- என் கணவர் தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்; பொதுக்கூட்டம், மாநாடு என்ருல் ஓடி ஓடி உழைப்பார்; அண்ணா மன்றத்தில் அமர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்த என் கணவரைக் கம்யூனிஸ்டுகள் -- என் கணவர் தி. மு. க. என்பதால் -- வெறிபிடித்து வெட்டிக் கொலை செய்துவிட்டார்கள் -- பாவிகள் -- நான் அனாதையாகிவிட்டேன் ஐயா' என்று கதறியழுது கூறினர்.

அழுது புலம்பிய அந்தத் தாய்க்கு ஆளுநர் ஷா, கண் கலங்கிய வண்ணம் ஆறுதல் கூறினர்.

## ஏழு பேர் கைது

கழகத் தோழர் முத்து கொலை செய்யப்பட்டது தொடர்பாக வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; இன்னும் 28 பேர்களைப் போலீசார் தேடி வருகிருர்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமானவர் வி. ஆர். அய்யாத்துரை என்பவர் ஆவார்; இவர் சிவகங்கை தாலுகா வலது கம்யூனிஸ்டுச் செயலாளர்; குமாரபட்டி ஊராட்சிமன்றத் தலைவர்; மாவட்ட விவசாயச் சங்கச் செயலாளர்.

மற்றும் அய்யனர், சுந்தரராசன், சிங்காரம், சோணைமுத்து, மறுரு சோணைமுத்து, சின்னச்சாமி ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஏழு நபர்களும் சிவகங்கை சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு 14 நாட்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# ஏழை மக்களின் வாழ்வு வெள்ளியாக மாறவில்லை

[★]

## விடுதலை விழாதான் வெள்ளி விழாவாகியிருக்கிறது

## 25 ஆண்டு சுதந்தர வாழ்வில் எளிய மக்கள் கண்ட பலன் என்ன?

### கழகத் தலைவர் கலைஞர் வினு -- 'மாநில சுயாட்சியே வாழ்வில் வளம் சேர்க்கும்' என விளக்கம்

திருச்செங்கோடு, ஆக. 4--

"எந்தப் பிரச்சினையானாலும் நாட்டு மக்களுக்கு -- ஏழை -- எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு -- பாட்டாளி மக்களுக்கு இன்னும் நன்மைகள் செய்யவேண்டுமானால் அதற்கு அதிகாரம் அதிகம் வேண்டும்; சுருக்கமாக அதை, 'மாநில சுயாட்சி' என்று நாம் கூறுகிறோம்.

"தமிழ்நாட்டிலே எல்லா வளங்களும் இருக்கின்றன; மண் வளம் உண்டு -- மன வளம் உண்டு -- நீர் வளம் உண்டு; இவ்வளவு வளங்கள் இருந்தும் இவைகளையெல்லாம் முழுவதுமாகப் பயன்படுத்திக்கொள்கின்ற அதிகாரம் நம்முடைய மாநிலத்திற்குக் கிடையாது!

"ஒவ்வொரு மாநிலமும் தங்கள் மாநிலத்தில் வாழ்க்கையில் வளம் காணவேண்டுமென்றால், அதிக அதிகாரம் பெற்றதாக இருக்கவேண்டும், அதற்குப் பெயர்தான் மாநில சுயாட்சி!

"மாநில சுயாட்சி பெற இறுதிவரையில் போராடுவோம்; அதற்கு மக்களின் ஆதரவு முழு அளவில் வேண்டும்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், திருச்செங்கோட்டில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்; அவர் மேலும் பேசியதாவது:---

"1969-ம் ஆண்டில் அண்ணா அவர்கள், தலைமையில் தி. மு. கழகம் அரசுக் கட்டிலில் ஏறிய காலத்திலே இருந்து இந்தக் காலம் வரையில் அதன் சாதனைகள் மலையளவு இருந்தாலும் -- கழக அரசினுடைய சாதனைகள் மற்ற மாநிலங்களால் பாராட்டப்படுகின்றது என்றாலும் -- கழக அரசினுடைய சாதனைகளைக் கடல்கடந்து வாழ்வோர்கூடக் கழிபேருவகையோடு புகழ்ந்து ஏத்தினாலும் -- கழக அரசின் சாதனைகளை வெளிநாட்டிலே உள்ளவர்களெல்லாம் புகழ்ந்துரைத்துப் பாராட்டு வழங்கினாலும், தமிழகத்திலே இருக்கின்ற சில பேர்—இருந்ததை இழந்தவர்கள்—உல்லாசத்தை அனுபவித்து, 'இன்றைக்கு அந்த இடம் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டதே' என்கின்ற கிலேசத்திற்கு ஆளானவர்கள்—வருத்தத்திற்கு ஆளானவர்கள்—ஏதாவதொரு சொத்தை சொள்ளைகளை -- இந்த அரசினால் செய்யப்படும் பணிகளுக்குச் சொல்விக் கொண்டுதான் வருகிறார்கள்!

முன்னேற்றக் கழக அரசு தோன்றிய காலத்திலேயே, 'இது ஒரு தேசவிரோதமான ஆட்சி தமிழ்நாட்டிலே ஆரம்பமாகியிருக்கிறது' என்று சொன்னவர்களை அனைவரும் ஒருமுறை நினைவுபடுத்திப் பார்க்கவேண்டும்.

அமைச்சர்கள் போகின்ற கார்களில் தேசியக் கொடி பறப்பதில்லை; இவர்கள் ஆளுவது இந்தியாவின் ஒரு பகுதி; மத்திய அரசுக்கு உட்பட்ட பகுதி; அந்தத் தமிழகத்திற்கும் சேர்த்துத்தான் தேசியக் கொடி பறக்கிறது; தேசியக் கொடியை -- அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்ட கொடியை -- தமிழகத்தை ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் தங்கள் கார்களில் பறக்க விடுவதில்லை' என்று சொன்னார்கள்.

'சென்னையிலே போடவில்லை' என்று செங்கோட்டையிலே போய்ச் சொன்னார்கள்; செங்கோட்டையிலே இருப்பவர்கள், 'அப்படியும் ஒருவேளை இருக்குமோ' என்று சந்தேகப்பட்டார்கள்.

'திருச்சியிலே நாங்கள் போகும்போது அந்தக் கொடி எங்கள் கார்களிலே பறக்கவில்லை' என்று திருச்செங்கோட்டிலே சொன்னார்கள்; திருச்செங்கோட்டிலே இருந்தவர்கள், 'ஒருவேளை அப்படியும் இருக்குமோ' என்ற ஐயத்திற்கு ஆளானார்கள்.

ஆனால், எங்களுடைய கார்கள் செங்கோட்டைக்குப் போனபோதும் -- திருச்செங்கோட்டுக்கு வந்தபோதும் -- நாகைக்குப் போனபோதும் -- நன்னிலத்திற்குச் சென்றபோதும் -- மதுரைக்கு வந்தபோதும் -- மானாமதுரைக்குப் போனபோதும் -- நெல்லைக்கு வந்தபோதும் -- வேறு சில சிற்றூர்களுக்குச் சென்றபோதும் -- ஆங்காங்கு இருக்கின்ற மக்கள் எங்கள் கார்களைக் கவனித்தார்கள்.

அவைகளில் பறக்கின்ற தேசியக் கொடியை அவர்கள் பார்த்தார்கள்: 'இவர்கள் கழக அமைச்சர்கள்தானே -- இவர்களுடைய கார்களில் தேசியக் கொடி பறக்கிறதே -- முந்தா நாள் அந்த முக்கூட்டிலே வந்து பேசிய காங்கிரசுக்காரர்கள், 'திராவிட முன்னேற்றக் கழகக் கார்களில் தேசியக் கொடி போடவில்லை' என்று சொன்னார்களே -- எவ்வளவு பெரிய தகிடுதத்தப் பேச்சு' என்று எண்ணிக் கொண்டனர்; காங்கிரசுக்காரர்களின் பொய்க் கூற்றைப் புரிந்துகொண்டார்கள்.

ஒரு மூன்று மாத காலம் அந்தப் பொய்யுரைகள் நாட்டு மக்களிடத்திலே செலாவணி ஆயிற்று; அதற்குப் பிறகு மக்கள் விழித்துக் கொண்டார்கள்; எனவே, 'இனிமேல் இந்தக் கச்சேரி செல்லாது—கச்சேரியை மாற்றுவோம்' என்று எண்ணி நிகழ்ச்சி நிரலை மாற்றிக் கொண்டனர்.

'அமைச்சர்கள் கலந்துகொள்கிற கூட்டங்களில் தேசிய கீதம் பாடுவதில்லை; அப்படியே பாடினாலும், அமைச்சர்கள் அந்த நேரத்தில் மேடையைவிட்டு இறங்கிப் போய்விடுகிறார்கள்; தேசிய கீதத்தை அமைச்சர்கள் மதிப்பதில்லை' என்றெல்லாம் கொஞ்ச நாள் பேசிப் பார்த்தார்கள்.

அமைச்சர்கள் செல்கின்ற ஊர்களில் தேசிய கீதம் பாடப்படுவதும், சில நேரங்களில் அங்கேயிருக்கின்ற ஒலிபெருக்கியாளர் தேசியக் கீத இசைத் தட்டைப் போட மறந்தாலும் அமைச்சர்கள் நினைவுபடுத்தி, 'நாட்டுப் பண் பாட்டைப் போடு' என்று சொல்வதையும் மக்கள் கவனித்தார்கள்.

'இவர்கள் தேசியக் கீதத்திற்கு இந்த அளவுக்கு மதிப்பளிக்கிறார்களே -- ஆனால் காங்கிரசார் மேடையேறி, இவர்கள் தேசிய கீதத்தை மதிப்பதில்லை என்கிறார்களே -- இது எவ்வளவு பெரிய பொய்' என்று நாட்டு மக்கள் பேசிக் கொண்டார்கள்.

தேசிய கீதத்தை மட்டுமல்ல -- 'நீராடுங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்' என்கின்ற தமிழ்த் தாய் வாழ்த்தையும் ஒரே இசைத் தட்டில் தமிழ்நாடு அரசாங்கமே 'ரிக்கார்டு' செய்து -- அந்த இசைத் தட்டைப் புழக்கத்திற்குவிட்டு -- அவை நாட்டிலே எல்லா இடத்திற்கும் பரவிய பிறகு, இந்தக் குற்றச்சாட்டும் நிறுத்தப்பட்டுவிட்டது!

நம்மை, 'தேச விரோதிகள்' என்பதற்கு -- நம்மை, 'தேசத் துரோகிகள்' என்பதற்கு -- 'தேசிய கீதத்தை மதிக்காதவர்கள் -- தேசியக் கொடியை மதிக்காதவர்கள்' என்கின்ற பயங்கரமான குற்றச்சாட்டை நம்மீது வீசிப் பார்த்தார்கள் -- பலிக்கவில்லை!

அதற்குப்பிறகு, 'நாம் நெஞ்சாரப் பொய் சொல்லுகிறோம் -- நாம் நெஞ்சாரத் தவறு செய்கிறோம் -- மனச் சாட்சிக்கு விரோதமாக நடக்கிறோம்; இவர்கள் தேசிய கீதத்தை மதிக்கிறார்கள்; இவர்கள் தமிழ்த் தாயை மதிக்கிறார்கள்; தேசியக் கொடியை மதிக்கிறார்கள்; தமிழை மதிக்கிறார்கள்; தாயகத்தை மதிக்கிறார்கள்; இந்தியாவின் ஒற்றுமையை -- ஒருமைப்பாட்டை மதிக்கிறார்கள்; முன்னேற்றக் கழக அரசு நம்முடைய மாநிலத்திலே இருக்கிறதென்றால் -- மாநில மக்களுடைய உரிமைக்காகப் பாடுபட அரசு அரசு உறுதி ஏற்கிறதென்றால் -- அது நாட்டிற்கு விரோதம் அல்ல -- அது தேசிய விரோதமல்ல -- நாட்டுக்கு விரோதமல்ல' என்கின்ற உண்மையை உணர்ந்து, 'இனிமேல் அந்த இடத்திலே இருக்கக்கூடாது' என்று அவர்களிடையே இருந்த நல்லவர் பலர் இந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள்; இன்னும் பலபேர் வந்து கொண்டிருக்கிறார்கள் -- வர இருக்கிறார்கள்!

இன்னும் ஓராண்டுக்காலத்தில் -- இரண்டாண்டுக் காலத்தில் அந்த இடம் காலியாகி, அங்கே இருக்கின்ற நல்லவர்களெல்லாம் இந்த இடத்திற்கு வருவார்கள் என்கின்ற நம்பிக்கையோடு திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய பயணத்தை நடத்திக்கொண்டிருக்கிறது.

'எவ்வளவோ எதிர்த்தோம் -- எவ்வளவோ விஷமப் பிரச்சாரம் செய்தோம் -- இவ்வளவுக்கும்பிறகு முன்னேற்றக் கழகம் வாழுகிறது; ஆகவே, முன்னேற்றக் கழக அரசை வீழ்த்தினால்தான் முன்னேற்றக் கழகம் வீழும்' என்று சிலபேர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

இங்குகூட நண்பர்கள் பேசும்போது, மத்திய அமைச்சர்கள் இருவரைப்பற்றிக் குறிப்பிட்டார்கள்; அந்த மத்திய அரசில் அமைச்சர்களின் பேச்சைத் தலைமையமைச்சர் இந்திரா கேட்டு -- அவருடைய எண்ணத்திற்கேற்பக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்களும், 'தமிழ்நாட்டில் முன்னேற்றக் கழக அரசு இன்றோடு வீழ்ந்தது; நாளைமுதல் குடியரசுத் தலைவர் ஆட்சி -- ஆளுநருடைய ஆட்சி' என்று அறிவித்துவிடுவார்களேயானால், நான் அவர்களுக்குச் சொல்லுவேன் -- 'கழக அரசுதான் கவிழும் -- கழகம் கவிழாது -- அதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்' என்று!

அண்ணா அவர்களுடைய தலைமையிலே நாங்கள் கழகத்தைத் தொடங்கிய அந்தக் காலத்திலும் -- அதற்குமுன்பு பெரியார் அவர்களது பெரும்படையில் என்னை ஒப்படைத்துக்கொண்ட அந்தக் காலத்திலும் -- திராவிடர் கழகமாக இருந்து பணியாற்றிய அந்தக் காலத்திலும் -- பதவிகளையெல்லாம் எதிர்பார்த்து கழகத்திலே எங்களை எவரும் சேர்ந்திடவில்லை!

பெற்றோருடைய கண்டிப்பு -- நண்பர்களுடைய உபதேசம் -- ஊராருடைய உறுமல் -- உற்றாருடைய அறிவுரை -- 'ஏன் அங்கே போய்க் கெட்டுப்போகிறாய்' என்று பலபேர் எங்களைத் தடுத்து நிறுத்திய சட்டங்கள் -- இவைகளையெல்லாம் தாண்டித்தான் -- இவைகளையெல்லாம் நாங்கள் பொருட்படுத்தாமலேதான், 'தமிழ்ச் சமுதாயம் விழித்தெழ -- தமிழ் மொழிக் காப்பாற்றப்பட -- பிற மொழி ஆதிக்கத்தால் இன்பத் தமிழுக்கு எவ்வித இடையூறும் நேராமல் காப்பாற்ற இன்னுயிர் தந்திடுவோம்; எம்முயிராம் செந்தமிழைக் காத்திடுவோம்' என்று சூளுரைத்து, இந்த இயக்கத்திலே எங்களை ஒப்படைத்துக்கொண்டோம்; ஆகவே இந்த அரசு -- இந்தப் பதவி கிடைக்கவேண்டும் என்பதற்காக இந்த இயக்கத்திற்கு வந்தவர்களல்லர் என்பதை அவர்கள் உணருவது அவசியம்.

இப்படிப்பட்ட நிலைமையிலே மக்களுடைய பிரச்சினைகளை இதயசுத்தியோடு -- இதய உணர்வோடு -- அவர்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு இன்றைக்குத் தமிழ்நாட்டிலே ஒரு அரசு நடைபெறுகிறது என்றால், அந்த அரசுக்குக் களங்கம் சொல்ல -- மாசு கற்பிக்க -- மத்தியிலே இருந்து அமைச்சர்கள் வருகிறார்கள்! 'அவர் பலம் நமக்கு இருக்கிறது' என்று இங்கே இருப்பவர்கள், 'எதை வேண்டுமானாலும் செய்யலாம் -- எதை வேண்டுமானாலும் பேசலாம் -- எந்தக் கிளர்ச்சியிலும் ஈடுபடலாம்' என்று கருதுவார்களேயானால் அது பெரிய தவறு என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் முதலிலேயே சொன்னேன் -- 'அரசு போய்விட்டாலும் கழகம் இருக்கும்' என்று! திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்நாட்டு மக்களின் மேன்மையை கருத்திற் கொண்டு ஒவ்வொரு நாளும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளித்துவிட்ட காரணத்தால், எல்லாப் பிச்சைக்காரர்களும் மறுவாழ்வு பெற்றுவிட்டார்களா -- இல்லை; தொடங்கியிருக்கிறோம் -- அது முற்றுப் பெற வேண்டும்.

அதைப் போலவே, பத்து இலட்சம் பேர் பார்வைபற்றவர்கள் இருக்கிறார்கள் தமிழகத்திலே; இந்த ஆண்டு ஓர் இலட்சம் பேருக்குத்தான் சிகிச்சை அளிக்கிறோம்; தொடர்ந்து அந்தப் பணியை ஆற்றிட வேண்டும்.

சென்னை மாநகரில் ஆயிரம் குடிசைப் பகுதிகளில் மக்கள் வாழ்கின்றார்கள்; 40 கோடி ரூபாய் அளவில் திட்டமிட்டு -- ஏழாண்டுக்கு காலத்தில் நல்ல வீடுகள் கட்டித்தர உறுதியேற்றுச் செயல்பட்டு வருகின்றோம்.

எல்லா விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் எவ்வளவோ சாதனைகளை -- சலுகைகளை அளித்திருக்கின்றோம்; இன்னும் சலுகைகளை அளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எவ்வளவோ இணைப்புச் சாலைகளைப் போட்டிருக்கின்றோம் -- இன்னும் ஆயிரக்கணக்கான இணைப்புச் சாலைகளைப் போடவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எத்தனையோ குக்கிராமங்களில் சுடுகாட்டிற்குச் செல்வதற்குக்கூட இருபதாண்டுக் கால காங்கிரசு ஆட்சியில் பாதை போடப்படவில்லை; வயல் வரப்பிலே பாடையைத் தூக்கிக்கொண்டு செல்வதும் -- நான்கு பேர் நடப்பதற்கு இடமில்லாமல் தூக்கிச் செல்பவர்கள் சாய்வதும் -- அவர்களோடு சேர்ந்து பிணமும் சாய்வதுமான கொடுமைகள் நிகழ்ந்தன -- இருபதாண்டுக்கால சுதந்தர ஆட்சியில்; இன்னும் இப்படிப்பட்ட கிராமங்கள் நிறைய இருக்கின்றன.

இந்தியச் சுதந்தர வெள்ளி விழாவினைக் கொண்டாட இருக்கின்றோம்; அப்படிப்பட்ட நிலையில், சுதந்தரம் பெற்று இருபத்தைந்தாண்டுகள் ஆகியும் ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கை பித்தளையாக -- தகரமாக இருக்கின்றன; 'தகரம் வெள்ளியாக மாறியதா' என்றால் இல்லை; விழாதான் வெள்ளி விழா -- அவர்கள் வாழ்க்கை நிலை இன்னும் மாறவில்லை!

நெசவாளர்கள் இந்த நாட்டிலே கண்களைப் போன்றவர்கள்; நம் மானத்தைக் காப்பாற்றக்கூடியவர்கள்; நெசவாளர்களுக்காக, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அல்ல -- எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில் -- 'தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளுக்கு நல்ல மார்க்கெட் ஏற்படவேண்டும்' என்பதற்காக -- எங்கள் தோள்களிலே அந்தத் துணிகளைச் சுமந்து சென்று ஒரே நாளில் ஓர் இலட்சம் ரூபாய்க்கு விற்றோம்!

தமிழ்நாட்டிலேயே நெசவாளர்களுக்காகப் பாடுபட்ட கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் என்பதை நெசவாளர் பெருங்குடி மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்; அந்த நெசவாளர் வாழ்வில் ஒளி ஏற்பட மேலும் பல திட்டங்களைத் தீட்டியிருக்கின்றோம்.

"ஏழை நெசவாளர்களுக்காகக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும்; அதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்" என்று சட்டமன்றத்திலேயே சொன்னேன்; அதற்கேற்ப, ஒரு குழு அமைக்கப்பட்டது; குழுவின் அறிக்கை கிடைத்ததும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

நெசவாளர் பிரச்சினையைத் தமிழக அரசால் மட்டும் தீர்க்க முடியாது; நெசவாளர் பிரச்சினை மத்திய அரசுடன் முடிச்சு போடப்பட்டிருக்கிறது; அந்த முடிச்சு தமிழக அரசால் மட்டும் அவிழ்க்கக்கூடிய முடிச்சு அல்ல; மத்திய அரசும் சேர்ந்துதான் அந்த முடிச்சை அவிழ்த்துவிட முடியும்; 'அதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு வேண்டும்' என்று நான் கேட்டுக் கேட்டு தொண்டை வறண்டுவிட்டது; நடந்து நடந்து கால்கள் வலியெடுத்துவிட்டன; எழுதி எழுதி கையும் வலியெடுத்து விட்டது; இன்னும் மத்திய அரசு அதைப்பற்றி கவனிக்கவில்லை!"

---

## ஆண்டுக்கு 300 முட்டையிடும் வாத்து

### கேரளத்தில் வளர்க்கப்படும்

புதுடில்லி, ஆக. 3—

ஆண்டொன்றுக்கு ஒவ்வொன்றும் முந்நூறு முட்டைகள் இடக்கூடிய 'காக்கி காம்பெல்' என்னும் புதியவகை வாத்துக்கள் கேரளத்தின் தட்பவெப்ப நிலையில் நன்கு வளரக்கூடியனவாய் இருக்கின்றனர்; இவ்வகை வாத்துகள் பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும்

ஆந்திரம், அசாம், மைசூர், அரியானா, ஜம்மு-காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் வளர்ப்பதற்கும் இவை வாங்கப்பட்டுள்ளன.

தற்போது உள்ள வாத்து வளர்ப்புப் பண்ணைகளில் மேம்பாடு செய்யப்பட்டபின் இவை மற்ற மாநிலங்களுக்கும் அளிக்கப்படும்"

என்று, மக்களவையில், மத்திய வேளாண்மைத் துறை துணை அமைச்சர் பேராசிரியர் ஷேர் சிங் தெரிவித்தார்.

---

## பிரிட்டனில் அவசர நிலை பிரகடனம்

### நெருக்கடியைச் சமாளிக்க நடவடிக்கை

இலண்டன், ஆக. 4—

பிரிட்டிஷ் துறைமுகங்களில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் விளைவாக நேர்ந்துள்ள நெருக்கடியைச் சமாளிக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் அவசர நிலை பிரகடனம் செய்தது.

அவசரநிலை பிரகடனம் செய்வதன் மூலம், துறைமுகங்களில் தேங்கிக்கிடக்கும் இன்றியமையா வாழ்க்கைப்பொருள்களையும் -- உணவுப் பண்டங்களையும் கப்பல்களிலிருந்து எடுக்கவும், நாட்டில் வழங்கவும் இராணுவ வீரர்களைப் பயன்படுத்தும் அதிகாரம் கிடைக்கிறது.

### இரண்டாண்டுக்குள் நான்கு தடவை பிரகடனம்

இரண்டு ஆண்டுகளுக்குமுன் தலைமையமைச்சர் எட்வர்ட் ஹீத் பதவிக்கு வந்தார்; அவரது அரசு பிரகடனம் செய்யும் நான்காவது அவசர நிலை இது.

துறைமுகங்களில் 500 கப்பல்களில், கெட்டுவிடக்கூடிய உணவுப் பொருள்கள் -- கால்நடை தீவனம் -- பழங்கள் -- காய்கறிகள் உள்ளன; இவைத் தவிர, 10 கோடி பவுன் மதிப்புள்ள ஏற்றுமதிகள் வேறு காத்திருக்கின்றன.

அர்ஜன்டைனாவிலிருந்து இறைச்சி தருவிக்கப்படுகிறது; இது ஐஸ் பதனமுறையில் கொண்டு வரப்படுகிறது.

எல்லாவற்றையும்விட முக்கியமான நெருக்கடி தீவனம் பற்றியதே; விவசாயப் பண்ணை மாடுகள் -- குதிரைகள் -- கோழிகள் -- பன்றிகள் தீவனமின்றித் தவிக்கின்றன.

---

## பஸ் டிக்கெட்டுகளுக்கு பரிசுத் திட்டம்

### மைசூர் அமைச்சர் அறிவிப்பு

பெங்களூர், ஆக. 2—

பஸ் டிக்கெட்டுகளுக்குப் பரிசுத் திட்டம் ஒன்றைக் கொண்டுவர மைசூர் அரசு திட்டமிட்டிருக்கிறது.

இந்தத்தகவலை, மைசூர் மேலவையில் போக்குவரத்து அமைச்சர் அஜிஸ் சையது தெரிவித்தார்.

"பஸ் கண்டக்டர்களுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டு--பலர் ஓசிப்பயணம் செய்கிறார்கள்; இதைத் தடுக்கவும்--பஸ்டிக்கெட்டு வாங்குவதை ஊக்குவிக்கவும் இந்த புதிய திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறோம்" என்று அவர் கூறினார்.

---

## கடைசி சொட்டு இரத்தம் இருக்கும் வரை....

### ஏழை மக்களின் மேம்பாட்டுக்காகப் போராடுவோம்

குமாரபாளையம், ஆக. 3—

"அண்ணா அவர்கள், 'கழக அரசின் திட்டங்கள் ஏழை எளிய மக்களின் நல்வாழ்வை மையமாக வைத்தே தீட்டப்படும்' என்று சொன்னதற்குகேற்ப, இந்த அரசு திட்டம் தீட்டிச் செயல்படுகிறது.

ஏற்றத்தாழ்வற்ற சமதர்ம யுகம் நோக்கிப் பெரியதோர் பயணத்தை நடத்தி வருகிறோம்; இதில் மத்திய அரசுடன் போட்டி போட்டுக் கொண்டு வெற்றி பெற விரும்புகிறோம்.

தலைமையமைச்சர் இந்திரா தலைமையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலும் -- தேசிய வளர்ச்சி மாநாட்டிலும் பேசும்போது, 'நாம் சமதர்ம சமுதாயத்தை உருவாக்கப் பணியாற்றி வருகிறோம்; இதற்காக இப்போது இருப்பவர்கள் பெரும் தியாகம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம்; புதிய இந்தியாவைக் காண தியாகங்களைச் செய்யவேண்டும் என்பதில் இருவேறு கருத்தில்லை; ஆனால், நாளைக்கு வரும் பலாக்காய்க்காக இன்றைக்கு கிடைத்த களாக்காயை கிடைக்காமல் செய்துவிடக் கூடாது' என்று குறிப்பிட்டேன்.

ஆடம்பரங்களையும் அட்டகாசங்களையும் குறைத்து -- சீமான்களின் செல்வாக்கைக் குறைப்பது சமதர்ம சமுதாயத்தின் ஒரு கூறு என்றாலும், ஏழைகளின் எதிர்காலத்திற்காக இப்படிப்பட்ட பணிகள் செய்யப்பட வேண்டும் என்ற முடிவுக்கேற்ப -- அந்த அடிப்படையில் -- பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது -- கண்ணொளி வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இப்படி பிற்படுத்தப்பட்ட -- தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடும் அரசு, எதிர்ப்புகள் எத்தனை வந்தாலும் அவற்றையெல்லாம் துச்சமென மதித்து, விவசாயிகள் -- பாட்டாளிகளின் -- நடுத்தர மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்காகப் பாடுபடும்.

எங்களின் உடலில் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரையில், இந்த மக்களுக்காகப் போராடுவோம் -- அவர்கள் வாழ்வு மேம்படப் பணியாற்றுவோம்; அதன் ஒரு கட்டம்தான் இந்தக் கண்ணொளி வழங்கும் திட்டமாகும்."

--முதலமைச்சர் கலைஞர்

(குமாரபாளையம் இலவசக் கண் சிகிச்சை முகாம் நிறைவு விழாவில்)

---

## டாக்டர்--நர்சு வேலைக்கு ஆள் இல்லை

### சுருக்கெழுத்தாளர் வேலைக்கும் ஆட்கள் தேவை

### தமிழ்நாட்டின் வேலை வாய்ப்பு நிலவரம் -- நிலைமை விளக்கம்

சென்னை, ஆக. 3—

"தமிழ்நாட்டில் நர்சுகள் -- டாக்டர்கள் -- சுருக்கெழுத்தாளர்கள் ஆகிய வேலைகளுக்குப் போதிய அளவு ஆட்கள் கிடைக்கவில்லை"

என்று தமிழ்நாடு வேலை வாய்ப்பு நிலைய இயக்குநர் வாசகம் தெரிவித்துள்ளார்; செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:—

"1971-ம் ஆண்டு டிசம்பர் திங்கள்வரையில், வேலைத் தேடித் தரும் நிலையங்களில் வேலைக்காகப் பெயர்ப் பதிவு செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 4,60,000 ஆகும்.

இவர்களில் எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் 1,53,000 பேர்; எஸ்.எஸ்.எல்.சி.-க்கு மேல் படித்து -- ஆனால் பட்டம்பெறாதவர்கள் 14,204 பேர்; பட்டம் பெற்றவர்கள் -- (டாக்டர்கள் -- பொறியர்கள் உட்பட) 24,926 பேர்; மேல் பட்டப் படிப்புப் படித்தவர்கள் 2,732 பேர்.

மொத்தம் 4 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வேலைக்காகக் காத்திருக்கின்றனர்; அதே நேரம் நர்சுகள் -- சுருக்கெழுத்தாளர்கள் -- டாக்டர்கள் போன்ற சில குறிப்பிட்ட வேலைகளுக்குப் போதிய பயிற்சி பெற்றவர்கள் கிடைப்பதில்லை; இதனை மற்றவர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

பர்மா அகதிகள் மற்றும் இலங்கைத் தமிழர்கள் ஆகியவர்களும் ஏராளமாகப் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர்; இவர்களில் 18 சதவிகிதம்பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இது தவிர, பர்மா அகதிகளுக்குப் பாய்லர் சிப்பந்தி வேலைக்குப் பயிற்சியளிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது.

திருச்செந்தூரில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலையில் 50 பேர்களுக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; பயிற்சிபெற்றபின்னர் உடனடியாக அரசாங்கத்தில் அவர்களுக்கு வேலை கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பொதுவாகக் கல்லூரிகள் அல்லது பள்ளிக்கூடங்களில் படிப்பவர்கள், படிக்கும்போது தங்கள் படிப்பின்மூலம் எதிர்காலத்தில் என்னென்ன வேலை வாய்ப்பைப்பெற முடியும் அல்லது எதைப் படித்தால் வேலை கிடைக்கும் என்பதுபற்றித் தெரிந்துகொள்வதில்லை; இதனால், படித்து முடிந்தவுடன் அவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள்.

எனவே, என்னென்ன வேலைகள் காலியாக உள்ளன -- எந்தப் பயிற்சிபெற்றால் உடனடியாக வேலை கிடைக்கும் என்பது பற்றித் தமிழ்நாடு வேலை வாய்ப்பு -- பயிற்சித் துறை சார்பில் அவர்களுக்கு விளக்கங்கள் தரப்படுகின்றன.

இது தவிர, கல்வி அதிகாரிகளும் சொற்பொழிவு ஆற்றுகிறார்கள்; மற்றும் வேலை வாய்ப்புத் தேடித் தரும் அலுவலகங்களிலும் கல்வி அதிகாரிகள் -- அவர்களுக்கு வழிகாட்டும்விதத்தில் பேசுகிறார்கள்.

இது தவிர, வேலை வாய்ப்பு அலுவலகத்தின் சாதனைகளையும் -- வேலை இல்லாதவர்கள் எப்படி வேலை பெறுவது என்பதுபற்றியும் விளக்குவதற்காகத் திரைப்படம் எடுக்கத் திட்டமிட்டுள்ளோம்; இதன்மூலம் அவர்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியும்; இது தவிர, துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன."

---

## சுதந்தர நாள் வெள்ளி விழா

### அரசுக் கட்டடங்களில் ஒளிவிளக்கு அலங்காரம் - தமிழக அரசு ஏற்பாடு

சென்னை, ஆக. 3—

சுதந்தர நாள் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது அரசாங்கக் கட்டடங்களில் ஒளி விளக்குகளால் அலங்காரம் செய்யத் தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்தியா சுதந்தரமடைந்து ஆகஸ்டு 14-ந் நாளுடன் 25 ஆண்டுகள் முடிவடைகின்றன; இதை முன்னிட்டு, இந்தியா முழுவதிலும், 'வெள்ளி விழா' கொண்டாட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

தமிழ்நாட்டிலும் சுதந்தர நாள் வெள்ளி விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடத் தமிழக அரசு ஏற்பாடுகள் செய்து வருகிறது; விழாவின் ஒரு பகுதியாக முக்கியமான அரசாங்கக் கட்டடங்கள் ஒளிவிளக்கு அலங்காரம் செய்யப்படும்.

இந்த ஒளிவிளக்கு அலங்காரம் 14-ம் நாள் இரவு 7 மணி முதல் 2 மணி வரையிலும் 15-ந் நாள் இரவு 7 மணிமுதல் 11 மணிவரையிலும் இருக்கும்.

இதேபோல் வியாபாரிகளும் -- பொதுமக்களும் தங்கள் வர்த்தக நிறுவனங்களிலும், வீடுகளிலும் 14, 15-ம் நாட்களில் ஒளிவிளக்கு அலங்காரம் செய்யும்படி அரசு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

---

## விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு விருது

### டெல்லிக்குத் தமிழ்நாடு அரசு பரிந்துரைத்துள்ள பட்டியல்

### பிற தியாகிகளையும் கௌரவிக்க ஏற்பாடு

சென்னை, ஆக. 3—

**"பலமுறை தண்டிக்கப்பட்டவர்கள் -- 20 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர்கள் உள்ளிட்ட 47 சுதந்தரப் போராட்டத் தியாகிகட்கு 'தாமிர பத்திர' விருதுகள் வழங்க மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்து, தமிழக அரசு கடிதம் எழுதியிருக்கிறது; மேலும் மூன்று தியாகிகள் பெயர் விரைவில் சிபாரிசு செய்யப்படும்.**

**"பட்டியலில் இடம் பெறாத, பாக்கியுள்ள சுதந்தரப் போராட்டத் தியாகிகளை சுதந்தர வெள்ளி விழா கொண்டாடும் இந்த ஆண்டில் தமிழ்நாடு அரசு கௌரவிக்கும்"**

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் விளக்கியதாவது:—

"சுதந்தரம் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகள் நூற்றுக்கணக்கானவர் இன்றும் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்; 'தாமிர பத்திர' விருதுபெற 50 பேரை மட்டுமே பரிந்துரை செய்யும்படி மத்திய அரசு, தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது; அப்படி அனுப்பப்படும் பட்டியலில் தற்போது எந்தப் பதவியும் வகிக்காதவர்களாகவும் -- அதிகம் அறிமுகம் இல்லாதவர்களாகவும் இருக்க வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்தது.

தேர்ந்தெடுத்தவர்களில் ஒருவர் இறந்துவிட்டார்; இன்னொருவர் (கே. பி. ஜானகி) விருதை ஏற்க மறுத்துவிட்டார்; இப்போது 47 பெயர்களை மட்டுமே அனுப்பியிருக்கிறோம்; மீதமுள்ள மூன்று பெயர்களை விரைவில் தேர்வு செய்து மத்திய அரசுக்கு அனுப்பிவைப்போம்.

மாநில அரசாக எந்தத் தியாகிகளின் பெயரையும் விட்டுவிடவில்லை; 50 தியாகிகளின் பெயர்களை மட்டும் சிபாரிசு செய்து அனுப்பும்படி மத்திய அரசு வரையறுத்துவிட்டதால் மேலும் பல தியாகிகளைப் பட்டியலில் இணைக்க இயலவில்லை; எனினும் அவர்களைத் தமிழக அரசு ஏற்ற முறையில் கௌரவிக்கும்.

சுதந்தரப் போராட்டத்தில் பங்கு கொண்ட 7,000 தியாகிகட்குத் தமிழக அரசு மானியம் கொடுத்துவருகிறது; இவர்கட்கு மாவட்ட அளவில் சுதந்தரத் திருநாளன்று (ஆக. 15) மாவட்டக் கலெக்டர் அரசாங்கச் செலவில் விருந்தளித்துக் கௌரவிக்க வேண்டுமென்று தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது; இவர்கள், அந்தந்த மாவட்டத்தில் எங்கு இருந்தாலும் -- மாவட்டத் தலைநகருக்கு வந்து இந்த விருந்திலும் -- பாராட்டிலும் கலந்துகொள்ளுவதற்கு வசதியாகப் போக்குவரத்து வசதியும் செய்து தரப்படும்.

ஆகஸ்டு 15-ந் தேதி சுதந்தர நாள் வெள்ளி விழாவில் கலந்து கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் அமைச்சர் போகிறார்; அவர்களும் தியாகிகட்கு அளிக்கப்படும் இந்தப் பாராட்டு விருந்தில் கலந்துகொள்ளக் கூடும்."

மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட தியாகிகள் பட்டியல் வருமாறு:—

**சென்னை**
என். இராமரத்தினம்
அருண்
அருள்மரிநாதன்
திருவேங்கடம்

**செங்கற்பட்டு**
ஏ. கே. கோவிந்த ரெட்டி
முகைதீன் குட்டி
கே. எம். முனுசாமி முதலியார்;

**தென்னார்க்காடு**
வி. டி. துளசிங்கம் பிள்ளை
ஏ. வேலாயுத முதலியார்
பி. ஜி. பழனி பத்தர்
என். வி. சுதர்சனம்

**தஞ்சை**
சொக்கலிங்க பத்தர்
சுப்பையா (நாச்சியார் கோயில்)
மாயவரம் இசுமாயில்
எம். டி. தியாகராச பிள்ளை
கே. பி. நடராசன்

**திருச்சி**
பி. ஆர். இராமசாமி (20 ஆண்டுச் சிறை)
பி. நாகு
சுல்தான் பத்தாதி

**இராமநாதபுரம்**
தொண்டர் ஆர். முத்தையா (108 முறை தண்டனை)
எஸ். ஆர். தனுஷ்கோடி ராஜா
சி. முருகன்

**மதுரை**
கிருஷ்ணசாமி பாரதி
டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி
டி. இராமகிருஷ்ணன்

**நெல்லை**
எஸ். என். சோமயாசுலு
காசிராசன் (தூக்கு மேடைவரை போனவர்)
கே. பி. ஜானகி அம்மாள்
வி. மந்திரம் (குலசேகரப் பட்டினம் கொலை வழக்கு)

**கன்னியாகுமரி**
பி. கும்பலிங்கம்
சி. பி. இளங்கோ

**வட ஆற்காடு**
கல்யாணராமய்யர்
வி. கே. குப்புசாமி
சுந்தரவதனம்
அண்ணல்தங்கோ

**தர்மபுரி**
மாரிமுத்து செட்டியார்
எஸ். கன்னையா
ஈ. ஆர். நாகராசன்

**சேலம்**
ஏ. சுப்பிரமணியம்
பவானி சிங்
எஸ். ஆர். கிருஷ்ணன்

**கோவை**
ஆர். குப்புசாமி
இராமராஜ்
பி. எஸ். சின்னதுரை
எம். ஏ. ஈசுவரன்

**நீலகிரி**
சின்னச்சாமி தேசாய்
கே. என். நந்தி

# ஐ.நா.பேரவையில் வங்க தேசம்

## சீன -- அரபு நாடுகள் முட்டுக்கட்டை

புதுடில்லி, ஆக. 4—

அடுத்து கூடவிருக்கும் ஐ. நா. அவைக் கூட்டத்தில் வங்க தேசத்தை அனுமதிப்பது குறித்த பிரச்சினை வரும்போது, சில நாடுகள் முட்டுக்கட்டையாக இருக்கக்கூடும் எனத் தெரியவருகிறது.

இப்பிரச்சினையில் சீனா எப்படி நடந்துகொள்கிறது என்பதைப் பொறுத்தே, அவையின் போக்கு இருக்குமென்று கருதப்படுகிறது.

கடைசியாக அங்கீகாரம் அளித்த பெருவையும் சேர்த்து இதுவரையில் மொத்தம் 85 நாடுகள் வங்க தேசத்தை அங்கீகரித்துவிட்டன.

ஐ. நா. அவையின் ஐந்து நிரந்தர உறுப்பினர் நாடுகளில நான்கு அங்கீகரித்துவிட்டன; ஆனல், மற்றொரு நிரந்தர உறுப்பினர் நாடான சீனவும் -- சில அரபு நாடுகளும் இன்னும் அங்கீகாரம் அளிக்காமல் இருந்துவருகின்றன; பாகிஸ்தான் அங்கீகாரம் அளித்த பிறகே இவை வங்க தேசத்தை அங்கீகரிக்கக்கூடும் என்று தெரியவருகிறது.

இத்திங்கள் இறுதியில் பாகிஸ்தான் வங்க தேசத்தை அங்கீகரித்துவிடும் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது; ஆனல் அங்கீகாரப் பிரச்சினையில அது இப்போது தீவிரம் காட்டவில்லை என்று தெரியவருகிறது; ஆகவே, பாகிஸ்தானை ஆதரிக்கும் நாடுகளும் வங்க தேசத்தை அங்கீகரிப்பதில் தாமதம் செய்யக்கூடும்.

ஐ. நா.-விலுள்ள மொத்த உறுப்பினர் நாடுகள் 132 ஆகும்.

## உலக நீதிமன்ற உறுப்பினர் பதவி

### இந்தியா- பாகிஸ்தான் போட்டியிடக்கூடும்

வங்க தேசத்தை அனுமதிக்கும் பிரச்சினையுடன், உலக நீதிமன்றத்திற்கு ஓர் உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; இப்பதவிக்கு இந்தியா ஒரு வேட்பாளரை நிறுத்தும் என்று தெரியவருகிறது.

இந்தப் பதவிக்குப் பாகிஸ்தானும் தனது வேட்பாளரை நிறுத்தக்கூடும் என்று கூறப்படுகிறது.

# கேரளத்துக்குத் தலைச் சுமையாக அரிசி கடத்தல்

## எல்லையில் 174 பேர் கைது

கோவை, ஆக. 4—

கேரளத்துக்கு அரிசியைக் கள்ளத்தனமாகக் கடத்த முயன்றதாக 174 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேரளத்துக்குத் தலைச் சுமையாக அரிசி கடத்தப்படுகிறது என்ற தகவல் கிடைத்து உஷார் (உணவுப் பிரிவு) போலீசார் பொள்ளாச்சி தாலுகா கவளப் என்னும் கிராமத்தில் காத்திருந்தனர்; இந்த ஊர், கேரள எல்லைக்கு அருகில் இருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் பலர், தலையில் அரிசி மூட்டைகளுடன் கேரளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்; போலீசார் அவர்களை மறித்து 174 பேரைப் பிடித்தனர்; மற்றவர்கள் மூட்டைகளைப் போட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

சுமார் ரூ. 10,000 பெறுமானமுள்ள 120 மூட்டை அரிசி கைப்பற்றப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] சென்னை-[illegible]) [illegible] வெளியிடப்படுகிறது.

# அவசர நிலைமை ரத்து ஆகாதாம்

புதுடில்லி, ஆக. 3—

"சிம்லா ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதால் இந்தியாவில் அவசர நிலைமை ரத்து ஆகுமா?"

என்று, மக்களவையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் உள்நாட்டுத் துணையமைச்சர் மொகிசின் கூறியதாவது:—

"அவசர நிலைமையை இப்போது ரத்து செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லை."

# நாட்டின் வறட்சி நிலை

## போர்க்காலச் சூழ்நிலை நடவடிக்கை

### நாடாளுமன்றத்தில் அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி ஆக. 4--

"நாட்டில் சுமார் பாதிப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் வறட்சி நிலையைச் சமாளிக்கப் போர்க் கால நிலைமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது"

என்று மத்திய உணவு அமைச்சர் மக்ருதீன் அலி அகமது நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழுக் கூட்டத்தில் இது குறித்து விவாதித்த, தேவைப்படும் இடங்களுக்கு உணவுப் பொருட்களும் -- நிதியுதவியும் உடனடியாக அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

### சிக்கன நடவடிக்கை

வறட்சி நிலையைக் கருதி கடுமையான சிக்கன நடவடிக்கைகளைக் கடைபிடிப்பது குறித்துப் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது.

"ஏற்கனவே 100 பேருக்குமேல் விருந்து வழங்கப்படக்கூடாது என்று கட்டுப்பாடு இருந்துவருவதாகவும் அதை மேலும் குறைக்கலாம் என்பது குறித்தும் யோசனை செய்யப்பட்டுவருகிறது" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### வறட்சிப் பணிகள் -- கண்காணிக்கக் குழு

வறட்சி நிலவும் மாநிலங்களில் நடைபெறும் நிவாரணப் பணிகளைக் கண்காணிக்க ஒரு குழு அமைக்கலாமா என்பது குறித்தும் அரசு யோசித்துவருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

போர்க் கால நெருக்கடியின் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள்போல், வறட்சி நிவாரணப் பணிகள் செயல்படுத்தப்படுமென்று அவர் உறுதி கூறினர்.

# வங்காள தேச அகதிகளுக்குச் செலவிடப்பட்டது எவ்வளவு?

புதுடில்லி, ஆக. 4—

அகதிகளுக்காக ஆன செலவு குறித்து நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர் ஆர். கே. காடில்கர் பதிலளிக்கையில தெரிவித்ததாவது:—

"இந்த ஆண்டு மே மாதம்வரை அகதிகளுக்காக ரூ. 320 கோடி செலவிடப்பட்டது.

"அகதிகள் முகாம்கள் தவிர, நண்பர்கள் -- உறவினர்கள் வீடுகளிலும் வங்காள தேச அகதிகள் தங்கியிருந்தனர்; அவர்களும் இப்போது தாயகம் திரும்பிவிட்டனர்."

கேள்வி:—"இந்தியா—பாகிஸ்தான் பேச்சு வார்த்தையின போது, அதிகளுக்கான செலவையொட்டி நட்ட ஈடு கேட்கப்பட்டதா?"

அமைச்சர்:—"பொது நலனைக் கருதி இந்த விவரங்களை வெளியிடுவதற்கில்லை."

# மதுரை மாவட்ட தி.மு.க. ஐந்தாவது மாநாடு

## நிகழ்ச்சி நிரல்

### 5--8--72 சனி

காலை 9-மணி: கொடியேற்றுதல்

9-15 மணி: நாதசுர இசை — மதுரை சேதுராமன், பொன்னுசாமி குழுவினர்.

10-மணி: வரவேற்புரை — எஸ். முத்து எம்.எல்.சி. (வரவேற்புக் குழுத் தலைவர்)

திறப்புரை — எல். கணேசன் எம்.எல்.ஏ. (மத்திய -- மாநில தி.மு.க. அமைப்பாளர்)

அறிஞர் அண்ணா படத்திறப்பு —பி. கே. மூக்கையாத் தேவர் எம்.பி. (தலைவர், அகில இந்திய பார்வர்டு பிளாக்)

தலைவரை முன்மொழிதல், வழிமொழிதல்.

தலைமையுரை—முரசொலி மாறன் எம்.பி.

பிற்பகல் 2-30 மணி: பூ. ஆர். ஜீவரத்தினம் குழுவினர் இன்னிசை.

3-30 மணி: பாவலர் வரதராசன் குழுவினர் கலைநிகழ்ச்சி.

4-30 மணி: சொற்பொழிவு— மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் -- சட்டமன்ற, மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் -- மற்றும் கழக முன்னணியினர்.

இரவு 10-மணிக்கு—நாடகம்.

### 6--8--72 ஞாயிறு

காலை 9-மணி: மணி -- சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி.

10-மணி: சொற்பொழிவு.

பிற்பகல் 2-30 மணி: சிவகங்கை சேதுராசன் குழுவினரின் கலை நிகழ்ச்சி.

3-30 மணி: இசைமுரசு நாகூர் அனீபா குழுவினரின் இன்னிசை விருந்து.

மாலை 4-மணி: தீர்மானங்கள்.

சிறப்புரை—

கழகத் தலைவர்

**டாக்டர் மு. கருணாநிதி**

பொதுச்செயலாளர்

**டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**

பொருளாளர்-பொன்மனச் செம்மல்

**எம் ஜி. ஆர்.**

மற்றும் கழக முன்னணியினர்

இரவு 10-மணி: மதுரை கங்காசு குழுவினரின் கலை நிகழ்ச்சி.

# அமைச்சர் குமாரமங்கலத்தின் அகம்பாவம்

## நாடாளுமன்றத்தில் கடும் கண்டனம்

### நிலைமை முற்றியதால் மன்னிப்புக் கேட்க நேர்ந்தது

புதுடில்லி, ஆக. 4—

நேற்று மக்களவையில் அவைத் தலைவருக்கும் -- உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் நடைபெற்றது.

துர்காபூர் உருக்காலை குறித்துப் பேசிகொண்டிருந்த உறுப்பினர் ஒருவர் அது குறித்த விவரங்களடங்கிய சான்றேடுகளைக் காண்பித்துப் பேசிக்கொண்டிருக்கையில் உருக்குத்துறை அமைச்சர் மோகன் குமரமங்கலம், 'நிறைய சாகிதங்களைக் காண்பிப்பதாலேயே பிரச்சினையை விளக்கியதாகாது' என்று கூறினர்.

இதை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்தனர்; 'அமைச்சர் மிகவும் அகம்பாவத்துடன பேசுகிறார்; அவைத் தலைவர், அமைச்சர் பேசியதைத் திரும்பப் பெறச் சொல்ல வேண்டும்' என்று கேட்டுக் கொண்டனர்.

அவைத் தலைவர், 'நான் அப்படிக் கேட்டுக்கொள்ள முடியாது' என்றார்.

இதைத் தொடர்ந்து உறுப்பினர்களுக்கும் -- அவைத் தலைவருக்கும் இடையே வாக்குவாதம் நடைபெற்றது.

கடைசியில் குமாரமங்கலம் தாமாகவே முன்வந்து, 'நான் யாரையும் புண்படுத்தும் நோக்கத்துடன் எதையும் கூறவில்லை; அப்படிப் புண்படுத்தியிருந்தால் மன்னித்துவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்' என்றார்.

# குசராத் மாநிலத்தில் சட்டம் -- ஒழுங்கு சந்தி சிரிக்கிறது

## இரண்டு ஆண்டுகளில் 61 தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை

காந்தி நகர், ஆக. 4—

கடந்த 2 ஆண்டுகளில் 61 தாழ்த்தப்பட்ட மக்கள், குசராத்தில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

சட்டமன்றத்தில், இத்தகவலை முதலமைச்சர் வெளியிட்டார்.

"இவை தொடர்பாக 93 பேர் கைது செய்யப்பட்டதில் 87 பேர் மீது கொலை வழக்குகள் தொடரப்பட்டன" என்றும் அவர் தெரிவித்தார்.

# மேற்கு வங்கத்தில் பட்டினிச் சாவு

## அரை நூற்றுண்டில் கண்டிராத கடும் வறட்சி

### பல மாநிலங்களிலும் பஞ்ச நிலைமை-- நாடாளுமன்றத்தில உறுப்பினர்கள் தகவல்

கல்கத்தா, ஆக. 4—

"மேற்கு வங்கத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்டிராத ஒன்றாகும்" என்று கூறப்படுகிறது.

பல இடங்களில் பட்டினிச் சாவுகள் ஏற்பட்டிருப்பதாக எதிர்க்கட்சியினர் கூறினர்; 'மால்டா மாவட்டத்தில் 50 பேர் பட்டினியால் இறந்தனர்' என்று இடது கம்யூனிஸ்டு ஒருவர் நாடாளுமன்றத்தில்—பெயர்களுடன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பேசிய எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் நிலைமையில அச்சம் தெரிவித்தனர்; 'ஏற்பட்டிருப்பது வறட்சி நிலை அல்ல -- பஞ்ச நிலையாகும்' என்று அவர்கள் கருத்தறிவித்தனர்.

12 மாநிலங்களை வறட்சி பாதித்திருப்பதாகவும், இவைகளில் 6 மாநிலங்களில் ஏழரை கோடி மக்கள் பஞ்ச நிலையில இருந்து வருவதாகவும் ஜோதிர்மய பாசு கூறினர்; 'மேற்கு வங்கத்தில் மட்டும் வறட்சியால பாதிக்கப்பட்ட பயிர் நாசம் ரூ. 80 கோடி அளவில் இருக்கும்' என்றார் அவர்.

"உத்தரப் பிரதேசத்தில் 29,000 கிராமங்களும், ஆந்திரத்தில் 17,400 கிராமங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன; பீகாரில் ஒன்றரைக் கோடி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்; மாராட்டிரத்தில் 50 சதவிகித கிணறுகள் ஏற்கனவே வறண்டு போய் கிடக்கின்றன; இராஜஸ்தானில் 25 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்; திரிபுராவில் 6 பேர் பட்டினியால் இறந்ததாகச் சட்டமன்றத்திலேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது" என்றெல்லாம் உறுப்பினர்கள் எடுத்துக்காட்டினர்.